வேளச்சேரியில் – கழகத் தலைவர் பிறந்த நாள் விழா!

‘இடஒதுக்கீட்டை ஒழிக்கலாம்’ என மனப்பால் குடிப்பவர்களிடமிருந்து இடஒதுக்கீட்டைப் பாதுகாக்கிறார் நம் முதல்வர்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் – அமைச்சர் கே.என்.நேரு பேச்சு!

சென்னை, மார்ச். 20- தமிழ்நாடு முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழா சென்னைத் தெற்கில் மார்ச்-4 அன்று விஜய் நகர், வேளச்சேரியில் விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் வே.ஆனந்தம் ஏற்பாட்டில் ‘ஓயாத உழைப்பின் உருவகம் தளபதி’ எனும் தலைப்பில் வாழ்த்தரங்கம்நிகழ்ச்சி நடைபெற்றது.

இவ்வாழ்த்தரங்க நிகழ்ச்சி மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் - மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் - கே.என்.நேரு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், பீட்டர் அல்போன்ஸ் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.இந்நிகழ்ச்சியில் அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு.

40 ஆண்டு காலம் கழகத் தொண்டர்!

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கழகத்தலைவராகப் பணியாற்றினார். தலைவர் கழகத் தளபதி அவர்கள் தொண்டனாக சுமார் 40 ஆண்டுகாலம் பணியாற்றியிருக்கிறார். இளைஞரணி செயலாளராகமட்டுமல்ல, சிறைக்குச் சென்றது மட்டுமல்ல. பல்வேறு பொறுப்புகளை வகித்து கலைஞர் அவர்களுக்கு உறுதுணையாகப் பணியாற்றியதால்தான், மாநகராட்சி மேயர், சட்டமன்ற உறுப்பினர், உள்ளாட்சித்துறை அமைச்சர், துணை முதலமைச்சர், பின்பு இப்போதுதான் முதலமைச்சர். இந்த பொறுப்பிலே வந்திருக்கிறார் என்று சொன்னால், தி.மு.கழகத்திலே, மக்களுக்காக அவர் உழைத்த உழைப்பால் மட்டும்தான்.

இப்படியெல்லாம் உழைத்துக் கட்சியில் முதலமைச்சர் பொறுப்பிற்கு வந்து மக்கள் பணியாற்றியவர்களுக்கு மத்தியில், இப்போது ஒரு சில பேரால் கட்சி ஆரம்பித்தவர்களை நம்பி மக்கள் செல்கிறார்களே என்று காங்கிரஸ் கட்சியின் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஆதங்கப்பட்டது என்பது உண்மைதான்.ஓர் நாற்பதாண்டு காலம் நான் தளபதி அவர்களைக் கவனித்து வந்திருக்கிறேன். படிப்படியாக, படிப்படியாக, வேறு யாராலும் அந்த உழைப்பைத் தர முடியாத காரணத்தினால் தான் தளபதி அவர்கள் இன்றைக்கு முதலமைச்சராக வந்திருக்கிறார்.

ஒருவர் பெயரில் பிறந்த நாள் விழா கொண்டாடுகிறோம் என்றால் அவர்கள், இந்த மக்களுக்காக பலத்தியாகங்கள் செய்திருக்க வேண்டும். அப்படி நன்மைகளை மக்களுக்கு செய்த காரணத்தினால் தான், இந்த நான்காண்டு காலம், எவ்வளவோ பேர் தளபதியை பேசிப்பார்க்கிறார்கள். ஆனால் ஒன்றும் அவர்களால் செய்யமுடியவில்லை. ஆனால் இதுவரைத் தளபதி அவர்கள் 30 ஆண்டுகாலம் அனைத்துத் தேர்தல்களிலும் தளபதி அவர்கள் வெற்றிப்பெற்றிருக்கிறார்கள். கழகம் வெற்றிப் பெற்றிருக்கிறது என்று சொன்னால், எதிரிகள்கூட ஆச்சரியப்படுகிறார்கள்.

தளபதியை தரம் தாழ்ந்து விமர்சனம் செய்பவர்களையெல்லாம் புறந்தள்ளிவிட்டு, மக்களுக்காக இந்தக் காரியங்களை செய்வேன் என்று மக்களுக்காக உழைத்துக் கொண்டிருக்கிறார் தளபதி. இங்கே மேடையிலேயே வீற்றிருக்கின்ற காரம்பாக்கம் கணபதி, எஸ்.அரவிந்த் ரமேஷ் போன்றோர்கள் இன்றைக்கு சட்டமன்ற உறுப்பினர்களாகியிருக்கிறார்கள் என்றால், அவர்களெல்லாம் வட்டச் செயலாளராக, பகுதிக் கழக செயலாளராகப் பணியாற்றியதால்தான், கழகத்திலே ஒரு நற்பெயர் எடுத்தக் காரணத்தினால்தான் இந்த பொறுப்புக்குவர முடிந்தது. கழகத்திற்காக சிறப்பாகப் பணியாற்றியவர்களுக்கெல்லாம் கழகம் ஒரு நல்ல வாய்ப்பைத் தரும் என்ற அந்த உறுதியைத் தெரிவித்தக்கொள்கிறோம்.

விளையாட்டுத்துறை சார்பாக பணியாற்றியக் கொண்டிருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன் அவர்கள். ஏன் இதை சொல்கிறேன் என்றால், விளையாட்டுத்துறையும் நம்முடைய முதலமைச்சர் காலத்தில் சிறப்பாக விளங்கியிருக்கிறது. முதலமைச்சர் உழைத்தார். கட்சிக்கு உழைத்தார். கலைஞருக்கு உழைத்தார் என்பதைக் காட்டிலும், தலைவர் கலைஞர் இருக்கும்போது பல்வேறுப் பிரச்சினைகளைத் தளபதி அவர்கள் சந்தித்தார்.

எதிர்க்கட்சிகளின் முயற்சி முறியடிப்பு!

இடஒதுக்கீட்டை எப்படியாவது ஒழித்துக்கட்டிவிடவேண்டும் என்று எதிர்க்கட்சிகள் எடுத்த முயற்சியை ஒன்றிய அரசு எடுக்கிறபோது, அதை பாதுகாக்க உறுதியாக பெரியார் வழியில், அண்ணா வழியில், கலைஞர் வழியிலேயே அதை பாதுகாத்து இருக்கின்ற தலைவராக தமிழ்நாட்டின் காவல் தெய்வமாக, முதலமைச்சர் அவர்கள் இருந்துக்கொண்டிருக்கிறார்கள்.

சுரங்கம் அதை தோண்டுவதற்கு வந்தபோது, கொதித்தெழுந்தார்கள் தளபதி அவர்கள். எதிர்க்கட்சித் தலைவர் பழனிச்சாமிகூட இதுவரை ஏன் கேட்கவில்லை என்று கேட்டார். கடிதம் எழுதுகிறோம். இதுவரை ஏலம்விடவில்லை. இப்போது தோண்ட வருகிறார்கள். நான் முதலமைச்சராக இருக்கும்வரை ஒன்றிய அரசு வந்தால் செய்ய முடியாது என்று சட்டமன்றத்தில் முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

அடுத்து மொழிப்பிரச்சினைப் பற்றி தயாநிதிமாறன் எடுத்துச்சொன்னார்கள். இருமொழிக் கொள்கை - எங்கள் உயிர்க்கொள்கை. இந்தியை நாங்கள் ஏற்றுக் கொள்ளமாட்டோம் என்று அறிவித்ததோடு மட்டுமல்ல. ஒன்றிய அரசிடமிருந்து இரண்டாயிரம் கோடி வந்தாலும், அதை தரவில்லையென்றாலும் கூட, 10 ஆயிரம் கோடி தந்தாலும், மும்மொழிக் கொள்கை எங்களுக்குத் தேவையில்லை. 2 ஆயிரம் கோடியும் எங்களுக்குத் தேவையில்லை என்று சொல்லவில்லை. தரவில்லையென்றாலும்கூட பரவாயில்லை என்று சொல்லி இருக்கின்றவர் நம்முடைய முதலமைச்சர்.

காங்கிரஸ் கட்சியின் தலைவர்கள் சொல்கிறார்கள். நீங்கள் தளபதி செய்தால்தான் மற்ற எதிர்க்கட்சிக்கார்கள் கேட்பார்கள். நீங்கள் முன்னின்று நடத்துங்கள் ஒன்றிய அரசிற்கு எதிராக என்று சொல்லி, இந்திய அளவிலே ஒரு நம்பிக்கையான தலைவராக நம்முடையத் தலைவர் முதலமைச்சர் வந்திருக்கின்றார். அவருக்குத்தான் இந்த பிறந்தநாள் விழாக் கூட்டம். நாங்கள் ஒரு பத்து பிறந்தநாள் கூட்டங்களை நடத்தியிருக்கிறோம். ஆனால் மா.சு. அவர்கள் தினந்தோறும் ஒரு கூட்டம் ஒரு பகுதிக்கு என்று முதலமைச்சர் பிறந்தநாளுக்கு விழா எடுத்துக்கொண்டிருக்கிறார்.

சிறப்பாக பணியாற்றுகிறார் மா.சு!

இதுபோன்ற கூட்டங்கள் இப்போது மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் ஆனந்தம் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிற இதுபோன்ற நூறு கூட்டங்களை நான் நடத்திவிடுவேன். அதற்கு கலைஞர் அவர்கள் எங்களுக்குக் கற்றுக்கொடுத்திருக்கிறார்கள். கூட்டம் நடத்துவது, தொண்டனாக நின்று வேலை செய்வது, எங்களுக்கு எளிது. ஆனால் மைக் முன்னால் நின்று பேசுவது சுலபமல்ல. நான் மா.சு.விடம் சொன்னேன். என்னைப் போய் ஏன்

சிறப்புரையாற்ற அழைக்கிறீர்கள் என்று, ஆனால் மா.சு. அவர்கள் மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறார். நான் பல்வேறு அமைச்சர் பொறுப்பில் உள்ளவர்களோடு பழகிப் பார்த்தவன். மக்கள் நல்வாழ்வுத்துறையில் சிறப்பாக பணியாற்றிக்கொண்டிருக்கிறார் மா.சு.

இந்தப் பகுதியில் போட்டியிடுபவர்கள், வடசென்னையில் வெற்றிபெறுவது, மத்திய சென்னையில் வெற்றிபெறுவது எல்லாவற்றையும்விட, தென் சென்னையில் வெற்றிப்பெறுவதுதான் உண்மையான பலம். கழகத்தின் பலம். நான் அனுபவத்திலே சொல்லுகிறேன். அதேபோல் எங்கள் பகுதியில் நாங்கள்தான் வெற்றிபெறுவோம். ஏன் அப்படி சொல்கிறேன் என்றால், 1996-2001ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தார். சற்றொப்ப 60 மாதங்கள் முதலமைச்சராக இருந்தாரென்றால் ஐம்பது முறை திருச்சிக்கு வந்துவிடுவார். நம்முடைய தளபதி அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்று நான்காண்டுகாலம் கிட்டத்தெட்ட ஐம்பது மாதங்கள் முதலமைச்சராக இருக்கிறார் என்றால், ஐம்பது தடவையும் திருச்சிக்கு வந்திருப்பார்.

முதலமைச்சரோ, துணை முதலமைச்சரோ திருச்சிக்கு வருகிறபோது தொண்டர்களை சந்திக்கிறார்கள். தொண்டர்களுக்கு உற்சாகம் வருகிறது. நல்ல காரியங்கள் நடைபெறுகிறது. கலைஞர் காலத்திலும் சரி, தளபதி காலத்திலும் சரி. கழகம் போட்டியிட்ட அத்தனைத் தேர்தல்களிலும் வெற்றிபெற்று வந்திருக்கிறார்கள் என்று சொன்னால், அவருடைய அயராத உழைப்பு என்பதால்தான். எனவே தென் சென்னையில் இருக்கின்ற தோழர்களுக்கு என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்கள்.

திருச்சியில் கூட்டம் போடச்சொன்னார்கள். ஒரு பத்து பிறந்தநாள்விழா கூட்டம் நடத்தியிருக்கிறோம். மற்றப் பகுதிகளில் இருப்பவர்கள் அவரவர்கள் கூட்டங்களை நடத்திவிடுவார்கள். ஆனால் சென்னையில் இருக்கும் கழகத் தோழர்களைப் பார்த்து நான் ஆச்சரியப்படுகிறேன். மிகச் சிறப்பாக கழகத்தை வளர்த்து எடுப்பதிலே முன்னணியிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தெட்ட 25 ஆண்டுகாலம் நான் மாவட்ட செயலாளர், ஒன்றிய செயலாளர் படிப்படியாக வந்திருக்கிறோம். ஆனால் இந்த அளவிற்கு நடந்ததில்லை. மாநாடு நடத்துவோம். தளபதி என்ன சொல்கிறாரோ அதைச் சிறப்பாக செய்வோம். இப்படி வட்டக் கழகங்கள் தோறும், கழகத்தை வளர்த்தெடுப்பதற்காக நம்முடைய செயலாளர்கள், வட்டச் செயலாளர்கள், பகுதி கழகச் செயலாளர்கள் சிறப்பாக செயல்பட்டிருக்கிறார்கள்.

இந்தி படித்தவர்களின் நிலை என்ன?

ஒன்றிய அரசிலே அமைச்சராகவிருந்த தயாநிதி மாறன் அவர்கள் மிகச் சிறப்பாக பேசினார்கள். மொழிப் பிரச்சினையில் நாமெல்லாம் ஏமாந்தால் இனமே அழிந்துவிடும் என்று அவர் பேசினார். முதலமைச்சர் கலைஞரை சொல்வார்கள். எப்போது பார்த்தாலும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட பேசுகிறார் என்று கிண்டல் செய்வார்கள். இவர்களுக்கு வேற வேலையே இல்லை. இந்தி பிடிக்கவில்லை என்று சொன்னால் வெளிநாட்டில் போய் நாங்கள் எப்படி வேலை செய்வது என்று சொல்வார்கள். நான் உங்களுக்கு உண்மையைச் சொல்கிறேன். இந்திப் படித்துவிட்டு வேலையில்லை என்று சொல்லி தமிழ்நாட்டிற்கு வேலைக்கு வந்திருக்கிறார்கள். இந்தி தாய்மொழி என்றாலும்கூட அவர்களால் பிழைக்க முடியவில்லை. வேலையில்லை.

ஒன்றிய அரசு நிதி ஒதுக்குவதற்காக, இதைப்படி, அதைப்படி என்று மாநில அரசிற்கு ஒரு நெருக்கடியினை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். இவ்வளவு சிறப்பாக இருக்கிற இந்த ஆட்சிக்கு, நிதி நெருக்கடியை ஏற்படுத்தி, இந்த ஆட்சிக்குக் கெட்டப்பெயர் ஏற்படுத்த வேண்டும் என்று செய்கிறது ஒன்றிய அரசு.

அதைப்பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. நிதி அமைச்சர் சட்டமன்றத்தில் சொன்னார், 1 ரூபாய் நிதியை ஒன்றிய அரசிற்குக் கொடுக்கிறோம் என்றால், எங்களுக்கு தருவது வெறும் 29 பைசாதான். ஆனால் உத்தரபிரதேசத்திற்கு 1 ரூபாய் வரிக்கு ரூ.3.45 பைசா தருகிறது. எங்களுக்கு ஏன் இந்த ஓரவஞ்சணை என்று எடுத்துச்சொல்லியிருக்கிறார்.

இந்தியா முழுவதும் இருக்கிற மாநில அரசுகள் நாம் சொன்னதற்குப் பிறகு இப்போது விழித்துக் கொண்டு கேட்கிறார்கள். இதுபோல் சொல்லக்கூடியவர்கள் தி.மு.க. அமைச்சர்கள். ஒன்றியத்தில் பி.ஜே.பி. இருக்கிறது. நாம் மிருகப் பலத்தோடு இருக்கிறோம். அவர்கள் நமக்கு எதிராக செயல்படுகிறார்கள். யார் எதிர்த்தாலும் நமக்கு கவலையில்லை. தொடர்ந்து இந்த ஆட்சியை முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக நடத்திக் கொண்டு வருகிறார்.

சென்னை மாநகராட்சியில் இதுவரை இதுபோன்ற பணிகள் நடைபெற்றதில்லை என்று சொல்லும அளவிற்கு மாநகராட்சியில் மக்கள் பணிகளை செய்து கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தளபதி அவர்கள். பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிட்டதட்ட 8 கோடி மக்களுக்கும் வழங்கப்படுகிறது. சிறப்பான திட்டங்களை கொண்டுவந்து செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் தளபதி அவர்கள். இந்தாண்டு நகர்ப்புறத்தில் வாழ்பவர்களுக்கெல்லாம் அனைத்துப் பணிகளையும் செய்கிறார்கள்.

ஏன் இதையெல்லாம் சொல்கிறேன் என்றால், கலைஞர் அமைச்சரவையில் மூன்று முறை அமைச்சராக இருந்திருக்கிறேன். இப்போது தளபதி அவர்கள் முதலமைச்சராக இருக்கிறார். இப்போதும் நான் பணியாற்றிக்கொண்டிருக்கிறேன். கலைஞர் அரசிலே நிறைய நிதி இருந்தது. ஒன்றிய அரசு நிதியை மாநிலங்களுக்கு கொடுத்தது. நினைத்தக் காரியத்தை செயல்படுத்த முடிந்தது. ஆனால் இன்றைக்கு இருக்கிற ஒன்றிய அரசு நிதியைக் கொடுப்பதில்லை. கல்விக்கு மட்டுமல்ல. மெட்ரோ திட்டத்திற்கும் தான். நாம் போய் கேட்டு, கேட்டு பார்க்க வேண்டியிருக்கிறது. நான் கூட டெல்லிக்குப் போய் எங்கள் துறைக்கு நிதியைக் கேட்டு வந்திருக்கிறேன்.

மக்களுக்காக தினந்தோறும் பணியாற்றும் முதல்வர்!

கலைஞர் அனுபவம் வேறு. தளபதி அவர்கள் மிகக் குறுகிய காலத்தில் இந்த ஆட்சியை செய்து கொண்டிருக்கிறார்கள். தளபதியைத் திட்டுவதற்காகவே சிலக் கட்சிகள் இருக்கின்றன. தினந்தோறும் மக்களுக்காக பணியாற்றக்கூடிய முதலமைச்சர். ஒருநாள்கூட ஓய்வெடுக்காமல் உழைக்கிறார்.

தமிழ்நாட்டில் ஜெயலலிதா, எம்.ஜி.ஆர். முதலமைச்சராக இருந்திருக்கிறார்கள். எடப்பாடி அவர்கள் நான்காண்டுகள் முதலமைச்சராக இருந்து இருக்கிறார். அவர்கள் முதலமைச்சராக இருக்கும் காலத்தில் நடைபெற்ற பணிகளைக் காட்டிலும், 100 அல்ல 200 சதவிகிதம் மக்கள் பணியாற்றுகிற நம்முடைய முதலமைச்சருக்கு, வருகிற காலத்தில் நம்முடைய கழகத் தோழர்கள், இப்போது நடத்துவதைக் காட்டிலும் சிறப்பாக செயல்படுத்தி, மீண்டும் நமது தளபதி அவர்களை முதலமைச்சர் என்று சொல்கிற அளவிலே, நாம் பணியாற்ற வேண்டும். வந்திருக்கிற பொதுமக்களும் அதற்கு ஆதரவு அளிக்க வேண்டும். இப்படி நல்லதொரு ஆட்சியினைத் தந்திருக்கிற தளபதி வாழ்க, வாழ்க என்று சொல்லி விடைபெறுகிறேன். வணக்கம். நன்றி.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு உரையாற்றினார்.

சிவகங்கை மாவட்டம் காளையார் கோவிலில் ஏ.வி.கே.மருத்துவமனை மற்றும் மருந்தகத்தினை கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் கிழக்கு ஒன்றிய கழக செயலாளர் வே.ஆரோக்கியசாமி, மருத்துவர் வி.சேகர், வேளாணி மற்றும் மருத்துவமனை ஊழியர்கள் கலந்து கொண்டார்கள்.

டாஸ்மாக்: கடைநிலை ஊழியர் தவறுக்கு அமைச்சரைப் பொறுப்பாக்க முடியுமா?

பிரச்சினைகளைத் தேடி போராட்டம் நடத்துபவர் புதுச்சேரி மற்றும் பா.ஜ.க. ஆளும் மாநில மதுக்கடைகளை மூட போராட்டம் நடத்துவாரா?

பா.ஜ.க. – அண்ணாமலைக்கு, காங்கிரஸ் – கு.செல்வப்பெருந்தகை கேள்வி!

சென்னை, மார்ச் 20- அமலாக்கத்துறையின் உள்நோக்கம் கொண்ட அறிக்கையின் அடிப்படையில், டாஸ்மாக் தலைமை அலுவலகத்தை முற்றுகையிட முயன்ற அண்ணாமலை உள்ளிட்ட பா.ஜ.க.வினர் கைது செய்யப்பட்டுள்ளனர். டாஸ்மாக் தலைமை அலுவலகம் அமைந்துள்ள தாளமுத்து நடராசன் மாளிகையை தடையை மீறி முற்றுகையிடும் போராட்டம் நடைபெற்றது. டாஸ்மாக்கில் ரூபாய் ஆயிரம் கோடி ஊழல் என்று மார்ச் 12-ஆம் தேதி ஊடகங்களின் மூலமாக அண்ணாமலை குற்றம் சாட்டினார்.

அடுத்த நாள் 13-ஆம் தேதி அமலாக்கத்துறை டாஸ்மாக்கில் ஆயிரம் கோடி ரூபாய் ஊழல் என்று அறிக்கை வெளியிட்டது. அந்த அறிக்கையில் எந்த அடிப்படையில் ஊழல் நடைபெற்றது என்பது பற்றி எந்த விவரமும் இல்லை. அந்த வழக்கு விவரங்கள் என்ன ? எந்த ஆண்டுகளில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டன என்ற விவரத்தை அறிவிக்காமலேயே டாஸ்மாக்கில் பணியாற்றுகிற கடைநிலை ஊழியர் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கைகளின் அடிப்படையில் அமலாக்கத்துறை இந்த குற்றச்சாட்டை கட்டமைத்துள்ளது. டாஸ்மாக்கில் பணியாற்றுகிற கடைநிலை ஊழியர் செய்கிற தவறுக்கு அத்துறையின் அமைச்சரை எப்படி பொறுப்பாக்க முடியும் ?

அங்கிட் திவாரி செய்த குற்றம்!

கடந்த டிசம்பர் 2023-இல் மதுரை அமலாக்கத்துறை அதிகாரி அங்கிட் திவாரி திண்டுக்கல் டாக்டரிடம் முதல் தவணையாக ரூபாய் 20 லட்சம் லஞ்சமாக பெற்று கையும் களவுமாக பிடிக்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அமலாக்கத்துறை அதிகாரி செய்த குற்றத்திற்கு அத்துறையின் அமைச்சரான நிர்மலா சீதாராமன் பொறுப்பேற்றாரா ? ஊருக்கு உபதேசம் செய்யும் அண்ணாமலை இதற்கு பதில் கூறுவாரா ? எனவே, இதுவொரு அப்பட்டமான பழிவாங்கும் நடவடிக்கையாகும். ஏற்கனவே அமலாக்கத்துறையின் அவதூறு குற்றச்சாட்டின் பேரில் 15 மாதங்கள் சிறையில் இருந்து, உச்சநீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்டு,

வெளியே வந்திருக்கிற அமைச்சர் செந்தில் பாலாஜி மீது, மீண்டும் குறிவைத்து கூறப்பட்ட குற்றச்சாட்டுகளை நீதிமன்றத்தின் முன் நிரூபிப்பேன் என்று தனது நிலையை தெளிவுபடுத்தியிருக்கிறார்.

தேசிய அளவில் பா.ஜ.க., அமலாக்கத்துறை, வருமான வரித்துறை, மத்திய புலனாய்வுத்துறை ஆகியவற்றோடு கூட்டணி வைத்துக் கொண்டு மாநில முதலமைச்சர்கள், அமைச்சர்கள் உள்ளிட்டோர் மீது வழக்கு பதிவு செய்து அவர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். இதுவரை பா.ஜ.க. ஆட்சியில் 10 ஆண்டுகளில் அமலாக்கத்துறை பதிவு செய்த 97 சதவிகித வழக்குகளில் 2 சதவிகிதம் தான் தண்டனை பெறப்பட்டுள்ளது. அரசியல் பழிவாங்கும் நோக்கத்தில் தான் அமலாக்கத்துறை செயல்படுகிறதே தவிர, குற்றச்சாட்டுகளை நிரூபிப்பதில் படுதோல்வி அடைந்திருக்கிறது. இதை எதிர்த்து காங்கிரஸ், தி.மு.க. உள்ளிட்ட எதிர்கட்சிகள் தொடுத்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

இந்நிலையில், டாஸ்மாக் தலைமை அலுவலகத்திற்கு முன்பாக போராட்டம் நடத்த பா.ஜ.க.வுக்கு காவல் துறையினர் அனுமதி அளிக்கவில்லை. குறிப்பாக, சென்னையில் போராட்டம் நடத்த வேண்டுமென்றால், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம், ராஜரத்தினம் விளையாட்டு அரங்கம், வள்ளுவர் கோட்டம் என சில குறிப்பிட்ட இடங்களில் தான் அனுமதி வழங்கப்படுகிறது. காங்கிரஸ் கட்சியினர் நடத்தும் ஊர்வலங்களுக்கு கூட சில நேரங்களில் அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. தடையை மீறி போராட்டம் நடத்தி கைது செய்யப்பட்ட சூழலில் அண்ணாமலை, ஊடகங்களில் பேசும் போது, இனிமேல் காவல்துறையினருக்கு அனுமதிக் கடிதம் அளிக்க மாட்டோம், பா.ஜ.க.வுக்கு மரியாதை அளிக்காத காவல்துறையினரை தூங்கவிடமாட்டோம் என்று மிரட்டியதோடு, டாஸ்மாக் கடைகளில் பூட்டு போடும் போராட்டம் நடத்தப்படும் என்று அண்ணாமலை அறிவித்திருக்கிறார். பிரச்சினைகளை தேடி அதற்காக போராட்டம் நடத்த முற்படுகிற அண்ணாமலை புதுச்சேரி உள்ளிட்ட பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் உள்ள மதுபானக் கடைகளை மூட போராட்டம் நடத்துவாரா ?

அமலாக்கத்துறையின் அடக்கு முறைகள்!

அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் தமிழ்நாட்டில் அமலாக்கத்துறையை தூண்டிவிட்டு வருகிற 2026 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பாக ஆற்றல்மிக்க அமைச்சர் செந்தில் பாலாஜியை முடக்க வேண்டுமென்ற நோக்கத்தில் இத்தகைய அடக்குமுறைகள் ஏவிவிடப்படுகிறது. இதை எதிர்கொள்கிற பேராற்றலும், துணிவும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு இருக்கிறது.

தமிழ்நாட்டை பொறுத்தவரை, இந்தியா கூட்டணி 2019 மக்களவை தேர்தலில் இருந்து கட்டுக்கோப்புடன் கொள்கை உறுதியோடு செயல்பட்டு அனைத்து தேர்தல்களிலும் மக்கள் ஆதரவோடு வெற்றி பெற்று வருகிறது. இந்நிலையில் பா.ஜ.க.வுடன் சேருவதற்கு தமிழகத்தில் எந்த கட்சியும் முன்வராத நிலையில் விரக்தியின் விளிம்பில் நின்று கொண்டு நாள்தோறும் அண்ணாமலை அவதூறு குற்றச்சாட்டுகளை கூறி வருகிறார்.

அநாகரிகமான அண்ணாமலை!

தமிழக வெற்றி கழகத்தை பா.ஜ.க. பக்கம் ஈர்ப்பதற்கு அதன் தலைவர் விஜய்க்கு ஒய் பிரிவு பாதுகாப்பு அமித்ஷாவின் பரிந்துரையின் பேரில் வழங்கப்பட்டது. ஆனால், தமிழ்நாட்டின் களநிலவரத்தை அறிந்த விஜய், நேற்று பா.ஜ.க.வின் டாஸ்மாக் போராட்டத்தை கடுமையான முறையில், மிகமிகத் தரம் தாழ்ந்து இழிவாக விமர்சனம் செய்திருக்கிறார். இதன் மூலம் தமிழ்நாட்டில் அரசியல் அநாகரீகமாக அண்ணாமலை மாறி வருகிறார்.

மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலைவாய்ப்பு உறுதி திட்டத்தின் மூலம் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக ஒன்றிய காங்கிரஸ் கூட்டணி ஆட்சியில் 2005 இல் கொண்டு வரப்பட்ட இத்திட்டத்திற்கான ரூபாய் 2118 கோடி நிதி தராமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு வஞ்சித்து வருகிறது என தமிழ்நாடு முதலமைச்சர் குற்றம் சாட்டினார். இதுகுறித்து பலமுறை கடிதம் எழுதினார். இதனால், கடந்த நவம்பர் மாதத்திலிருந்து ஐந்து மாதங்களாக 100 நாள் வேலை திட்டத்தில் தொழிலாளர்களுக்கு ஊதியம் தர முடியாத நிலை உள்ளது. இந்நிலையில் தமிழ்நாட்டிற்கு நிதி வழங்காமல் ஒன்றிய பா.ஜ.க. அரசு தொடர்ந்து வஞ்சித்து வருகிறது. தமிழ்நாட்டின் வளர்ச்சியில் கடுகளவாவது அக்கறை இருந்தால், ஒன்றிய அரசிடம் பேசி தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய நிதியை பெற்றுத் தர அண்ணாமலை முயற்சி செய்வாரா ?

தமிழகத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒன்றிய அரசின் நிதி பங்கீடு 201617 இல் 3.41 சதவிகிதமாக இருந்தது, 2024-25 இல் நிதி ஒதுக்கீடு 1.96 சதவிகிதமாக குறைந்திருக்கிறது. இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 4 சதவிகிதத்தையும், மொத்த மக்கள் தொகையில் 6 சதவிகிதத்தையும் பெற்றிருக்கிற தமிழ்நாடு, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு 9.21 சதவிகிதப் பங்கை அளிக்கிறது. ஆனால், தமிழகத்திற்கு ஒன்றிய பா.ஜ.க. அரசு வரிகளின் மூலமாக வழங்குகிற பங்கு வெறும் 4 சதவிகிதம் தான்.

தமிழ்நாடு விரோத போக்கு காரணமாக பா.ஜ.க. காலூன்ற முடியாத நிலையில் தி.மு.க., காங்கிரஸ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சிகளும், தமிழக அரசின் மக்கள் நலன்சார்ந்த திட்டங்கள் மூலம் மக்களின் பேராதரவை பெற்று வருவதால், அதை சகித்துக்கொள்ள முடியாத அண்ணாமலை, அரசியல் விரோத உணர்ச்சிகளின் காரணமாக அடிக்கடிப் போராட்டங்களை அறிவித்துக் கொண்டிருக்கிறார். போராட்டங்களை தேடி அலைந்து, அதை நடத்தி, ஊடகங்களின் விளம்பர வெளிச்சத்தை அண்ணாமலை பெறலாமே தவிர, தமிழ்நாட்டு மக்களின் ஆதரவை என்றுமே பெற முடியாது.

இவ்வாறு செல்வப்பெருந்தகை அறிக்கையில் கூறியுள்ளார்.